23.06.2026 O.S. 698/2022 வா.சா.1 பிரேம்குமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

2ம்பிரதிவாதி எந்த தேதியில் எங்களது வங்கிக்கு யாருடன் கடன் கேட்க வந்தார் என்றால் 15.6.2016 ல் 2ம் பிரதிவாதி வந்தார். யாருடன் வந்தார் என்று தெரியாது. கல்வி கடனாக ரூ.96,000/-ம் வழங்கப்பட்டது. கல்வி கடனுக்காக 2ம் பிரதிவாதியிடம் இருந்து ஏதாவது செக்யூரிட்டி வாங்கப்பட்டதா என்றால் இல்லை. எந்த ஆண்டில் இருந்து கடன் தொகை செலுத்தவில்லை என்றால் 2019ம் ஆண்டில் இருந்து செலுத்தவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது. 2ம் பிரதிவாதி படிப்பறிவு இல்லாத நபர் என்றும், அவர் ஆவணங்களில் என்ன உள்ளது என்பதை தெரியாமல் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு 2ம் பிரதிவாதிக்கு எதிராக நிலைக்க தகுந்தது அல்ல என்றால் சரியல்ல.

(Sd)K.சுதா ராணி,<br>கூடுதல் சார்பு நீதிபதி,<br>தென்காசி.